368—

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை சீராகப் பராமரித்தல்.

*10883 —திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மற்ற அரசு போக்குவரத்துக் கழகங்ளை ஒப்பிடும் போது பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சரிவர பராமரிக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பேருந்துகளைத் தூய்மைப்படுத்தும் பணியாளரை அதிகப்படுத்தி பேருந்துளைச் சீராகப் பரா மரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்ற அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் போன்று பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) பேருந்துகள் தூய்மையாக இருக்க பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் 13 பணிமனைகளில் தானியங்கி சுத்தம் செய்யும் இயந்திரம் நிறுவப்பட்டு தூய்மைப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற அரசு போக்குவரத்துக் கழகங்களைப் பார்க்கும்போது, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பராமரிப்பு சற்று குறைவாகத்தான் இருக்கிறது என்பது பொது மக்கள் கருத்து. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் துறையில் துரித மாக எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள். அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ''பல்லவா உன்னைத் தள்ளவா'' என்ற நிலையைப் போக்கி, இன்று ''பல்லவா சற்று மெல்லவா'' என்ற நிலையை உருவாக்கி இருக்கின்றார்கள். அந்தக் காரணத் தினால் பராமரிப்பு சற்றுக் கூடுதலாக இருக்கிறது என்றும் உணர முடிகிறது. இருந்தபோதிலும், பராமரிப்பைப் பொறுத்த வரையில், எங்களுடைய தந்தைப் பெரியார் போக்குவரத்துக் கழகத்தைப் பார்க்கும்போது, பல்லவன் போக்குவரத்துக்

1993 ஏப்ரல் 16]

கழகத்தில் பராமரிப்பு சற்றுக் குறைவாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையிலும், 10 ஆண்டுக்கு மேலே இருக்கின்ற பேருந்துகள் 347 பேருந்துகள் இருக்கின்றன. அதை இந்த ஆண்டு மாற்றுவதற்காக நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1992-வது ஆண்டு உலக வங்கியோடு தொடர்புகொண்டு, எந்த ஆட்சியிலேயும் இல்லாத அளவுக்கு 550 பேருந்துகளைப் புதிதாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை இந்த நேத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். இரண்டு மாத காலத்தில் அத்தனை பேருந்துகளும் அந்தப் பகுதியில் இயக்கப்படும்; அவை சிறந்த பேருந்துகள் எனக் குறிப்பிட விரும்புகிறேன். அதேபோல பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையிலும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். வால்-போஸ்டர் ஒட்டாத பேருந்துகளே இருக்க முடியாது. வால்-போஸ்டர்களை ஒட்டுகிற நேரத்தில், அதிலே வஜ்ஜிரம் வைத்து ஒட்டுகிற காரணத்தினாலே, பேருந்துகளிலே இருக்கின்ற பெயிண்ட் எல்லாம் வந்துவிடுகிறது. இன்றைக்கு எஃப்.ஸி. செய்துவிட்டு வருகிற பேருந்துகளிலே உடனடியாக அவற்றை ஒட்டுகிற காரணத்தினாலே, அடுத்த நாளே பார்த்தால்கூட அந்த பேருந்துகள் அழகாக இல்லாத தோற்றங்களை அளிக்கின்ற அளவு வால்-போஸ்டர்களை ஒட்டுகிறார்கள். ஆகவே அரசியல்வாதிகளும் மற்றும் இருக்கின்றவர்களும் இதில் உதவி புரிந்தால் நலமாக இருக்கும்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் இதுபோன்று வால்-போஸ்டர் ஒட்டுவதால் அதில் இருக்கின்ற சிரமத்தைப் போக்கவும், அதைச் சுத்தப்படுத்தவும் ஏதாவது பணியாளர்கள் அங்கே நியமனம் செய்யப்படுவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர்கள் இதற்குத் தேவை இல்லை. 18 பணிமனைகள் இருக்கின்றன. அங்கே தானியங்கி கருவி சுத்தம் செய்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே பேருந்துகள் உட்பகுதிகளில் மட்டும் பணியாளகளை வைத்து சுத்தம் செய்கின்றார்கள். பேருந்துகளின் மேல் பகுதிகளில் தானியங்கி கருவி மூலமாக வாட்டர் அடித்து நல்ல முறையில் சுத்தம் செய்து கொண்டு இருக்கிறோம். எனவே

[1993 ஏப்ரல் 16

பணியாளர்களைப் பொறுத்த வரையிலும் குறைபாடுகள் அங்கே இல்லை. ஆகவே, இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும், வேறு மாநிலங்களோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வேறு மாநிலங்களில், டில்லியை எடுத்துக்கொண்டாலும்சரி, அது போல் பம்பாய் போன்ற நகரங்களில் இருக்கின்ற பேருந்துகளில் வால்-போஸ்டர்களை ஒட்டுவது கிடையாது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் குறிப்பாக சென்னையில் ஓடிக்கொண்டு இருக்கின்ற பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளிலே நாள்தோறும் வால்-போஸ்டர்களை பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அத்தனை அரசியல் கட்சிகளும் மற்றவர்களும் செய்கின்ற விளம்பரங்களையும் நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அதிலே வஜ்ஜிரப் போட்டு ஒட்டுகின்ற காரணத்னாலேதான் அந்த போஸ்டர்கள் ஒட்டியபின் இரண்டு, மூன்று நாட்களுக்குள்ளே அந்த பெயின்ட்டின் பளபளப்பு இல்லாமல் போய் மங்கிய நிலை ஏற்படுகிறது. இரண்டு மூன்று முறை தொடர்ந்து அந்த பேருந்து ஓடுகிற நேரத்தில், மீண்டும் பெயின்ட் அடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர். ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளைத் தூய்மைப்படுத்த என்.எஸ்.எஸ்., என்.சி.சி. மாணவர்களையாவது பயன்படுத்தி, பேருந்துகளைத் தூய்மைப்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஒரு நாளைக்கு அல்லது இரண்டு நாட்களுக்குத்தான் பணியாற்ற முடியுமே தவிர, அவர்கள் தண்ணீரை எடுத்துக்கொண்டு பேருந்துகளிலே இருக்கின்ற சேற்றை கழுவுவதற்கு தயாராக இருக்கமாட்டார்கள். ஆகவே பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் 18 பணிமனைகள் இருக்கின்றன. அங்கே பேருந்துகளை தானியங்கி கருவி சுத்தம் செய்கின்ற காரணத்தினாலே, பேருந்துகள் நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகம் துவங்கப் பட்டபோது பல்லவன் பஸ் சென்னையிலே வருகிறது என்று சொன்னால், வெளியூர்களில் இருந்து வருகிற பஸ்கள் எல்லாம் ஒதுங்கிவிடும் என்று சொல்வார்கள். அதை நான் பார்த்து இருக்கிறேன்.

1993 ஏப்ரல் 16]

ஆனால் இன்றைக்கு பல்லவன் பஸ் வருகிறது என்று சொன்னால் அலுவலகங்களுக்கு மோட்டார் சைக்கள்களிலும், கார்களிலும், நடந்தும் செல்பவர்கள் எல்லாம் ஒதுங்கி ஒடுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம் பல்லவன் பஸ் வருகிறது என்று சொன்னால் இன்றைக்கு அழுக்கான புகையை கக்கிக் கொண்டு வருகிறது. ஹாரன் அடிக்க தேவையில்லை. அந்த அளவுக்கு அந்த வண்டியின் சத்தம் பெருகி வீதியில், சாலையில் செல்லக்கூடியவர்களுக்கு இடையூறாக இருக்கிறது. பல்லவன் பஸ்களில் கடந்த காலங்களில்....

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்வி கேட்கிறமாதிரித் தெரியவில்லையே. கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. போளூர் வரதன்: தலைவர் அவர்களே, கேள்வியாகத் தான் கேட்கிறேன். கடந்த காலங்களில் இருந்த பெயிண்ட் பார்ப்பதற்கு அழகாக இருந்தது. இன்றைக்கு அந்த பெயிண்ட் மாற்றப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கிறபோது பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து போல தெரியவில்லை. ஆகவே, இன்றைக்கு நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தாலும், பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு மெயின்டனன்ஸ் குறைந்த அளவுக்கு இருக்கிறது. அதை மாற்றியமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற குற்றச்சாட்டுகள் சரியானவை அல்ல, பொருத்த மானவையும் அல்ல. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் இரண்டாண்டு காலத்திற்கு முன்பு பிரேக் டவுன் என்று சொல்லப்படுகிற பேருந்துகள் அளவு 10 சதவீதம் இருந்தது. அந்த பிரேக் டவுன் அளவை குறைத்து ஒரு சதவீதத்திற்கு இன்றைக்கு கொண்டு வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு நல்லமுறையில் பேருந்துகள் பராமரிக்கப்படுகின்றன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப்போல திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்தப் பேருந்துகளைப் புதுப்பித்து இருக்கலாம். பல ஆண்டுகளாக புதுப்பிக்காத காரணத்தால், நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகுதான் உலக வங்கியுடன் தொடர்புகொண்டு 550 பேருந்துகளை புதியதாக மாற்று

வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறார்கள். இரண்டு மாதக்காலத்திலேயே அவை மாற்றப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்றொரு கருத்தையும் இங்கே சொல்லி இருக்கிறார்கள். பேருந்துகள் புகையை தள்ளிக்கொண்டு வருகின்றன, சத்தம் வருகிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு மக்கள் நெரிசல் எப்படி இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். (two wheelers) அதிகமாகி இருக்கின்றன. Cars அதிகமாகி இருக்கின்றன. அதுபோன்ற குற்றச்சாட்டை இதுவரையில் என்னுடைய கவனத்திற்கு அவர் கொண்டு வரவும் இல்லை. இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, பொது மக்களாக இருந்தாலும் சரி, கன்சூமர்களாக இருந்தாலும் சரி, என்னுடைய கவனத்திற்கு புகை கக்கி கொண்டு வருகிற பேருந்துகள் பல்லவன் போக்குவரத்து கழகத்திலே இருக்கின்றன என்பது கொண்டு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. எம். கே. பாலன்

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறபோது பஸ்களில் போஸ்டர் ஒட்டுகிற காரணத்தால் பெயிண்ட் மங்கலாகி விடுகிறது. அதனால் அடிக்கடி பெயிண்ட் அடிக்கிற சூழ்நிலை உருவாகி விடுகிறது என்று சொன்னார்கள். போஸ்டர் ஒட்டுவதைத் தடை செய்ய என்ன நடவடிக்கையெடுத்தாலும் அதை தடை செய்ய முடியவில்லை. ஆகவே, பஸ்களில் போஸ்டர் ஒட்டுவதற்காக தனி இடம் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஐந்தாண்டு காலத்திற்கு முன்னால் போஸ்டர் ஒட்டுவதற்காக பஸ்ஸின் பின்பகுதியில் ஒரு அளவை வைத்து 30—க்கு 40 என்ற அளவில் பெயர் பலகை வைத்து, அதில் போஸ்டர்கள் ஒட்டிக் கொள்ளலாம், விளம்பரங்கள் செய்யலாம் என்ற கருத்து இருந்தது. அதற்கு பிறகு அதில் விளம்பரம் செய்தவர்கள் மாதத்திற்கு ஒருமுறை அந்தப் பேருந்துகள் அந்த வழியாக இயக்கப்படவில்லை. அதற்குதான் விளம்பரத்தை தந்தேனே தவிர வேறல்ல என்று வழக்குமன்றத்திற்கு சென்ற காரணத்தால், பராமரிப்பு செலவைக் காட்டிலும், அதிலே வருகிற லாபம் அதிகமாக இல்லையென்ற காரணத்தால்தான் போஸ்டர் ஒட்டுவதற்காக தனியாக ஒரு இடத்தை ஒதுக்க வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 369, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.